குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 25-11-58 செவ்வாய் | இசை: 26

அன்னைமார்க்கு விண்ணப்பம்

மாய்த்தான் பகைப்படை;
மாய்ந்தான் களத்திடை;
பார்த்த தாய்முலைப்
பாலூறும் தமிழகம்!

போய்த்தீர்ந்த துண்டா வடவரின் அடிக்கீழ்?
புதல்வரை அனுப்புக அன்னைமீர் போருக்கே (மா)

பழித்தவாய் மூடுமுன் வடபுலம் தாக்கும்
பழந்தமி ழகமா அடிமை ஏற்கும்?
வழித்தான் தமிழகச் செல்வம் அனைத்தும்!
மக்களை அனுப்புக அன்னைமீர் போருக்கே (மா)

நற்றமிழ் மீது செலுத்தினன் கண்ணை;
நடுங்கிற் றேநம் இலக்கியப் பண்ணை!
மற்றும் பகைவனை விட்டுவைப் போமோ!
மைந்தரை அனுப்புக அன்னைமீர் போருக்கே (மா)

இருட்கடல் கிழிய எழுகசெம் பரிதி
எழுக மணிக்கொடி வென்றது கருதி!
நரிக்கா இடந்தரும் செந்தமிழ் வேங்கை
நன்மக்கள் தாரீர் அன்னைமீர் போருக்கே! (மா)

எங்குள்ள தமிழரும் எங்கள் பட்டாளம்!

சிங்கைத்த மிழ் மக்கள்
எங்கள் பட் டாளம்!
சிங்களத் தமி ழர்கள்
எங்கள் பட் டாளம்!
எங்குள்ள தமி ழரும்
எங்கள் பட் டாளம்
தங்கட்குத் தா யகம்
தமிழக மே நாளும்

தங்கத்தைச் சுட் டாலும்
தன்னொளி மங் காது
சந்தன மரைத் தாலும்
தன்மணம் குன் ருது
சங்கத்த மிழ்க் கொள்கைத்
தாய்ப்பாலி லே வந்த
சிங்கங்க ளுக் குள்ள
தென்பாங் குபோ காது

எங்கே தி ரிந்தாலும்
எங்கள் புலிக் கூட்டம்
கங்குல் பக லுந்தான்
காட்டைம றக் காது
செங்குத்து மலை யினில்
சிக்கித்த வித் தாலும்
தங்கத்த மிழ் நாடு
தாழப்பொ றுக் காது

இங்குவ ரும் மேன்மை
இனத்தவ ரின் மேன்மை
மங்காத்த மிழ் நாடு
மாத்தமி ழர் வீடு
எங்குள்ள தமி ழனும்
இந்நாட்டுப் பங் காளி!
பொங்கினல் ஒ ருள்ளம்
பொங்கும்த மிழ் வெள்ளம்

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ கார்த்திகை ௧ம்

விளை நிலந்தான் ஆனால் வேலி வேண்டும்.

நல்ல இடத்தில் நல்லவேளையில் வித்தப் பட்டிருக்கின்றது தமிழ்வளர்ச்சி விதை.

பார்ப்பனர் ஏடுகளை இடமாகக் கொள்ள வில்லை; அவைகளைப் பின்பற்றும் மற்ற ஏடுகளை இடமாகக் கொள்ளவில்லை. அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தை இடமாகக் கொள்ளவில்லை.

தமிழ் வளர்ச்சிக் குழுவானது அமைச்சர் சி. சுப்பிரமணியனார் தலைமையில், அரசினர் சார்பில் இடம் பெற்றுள்ளது!

நல்ல வேளையில் விதை தெளிக்கப்பட் டிருக்கின்றது என்றோம். வேறென்ன?

தமிழ்ப் பெருநூற்களில் நச்சினார்க்கினி யரின் பொருந்தாக் கருத்துக்களாலும், திருக் குறள் முதலியவற்றில் பரிமேலழகரின் பொருந்தாக் கருத்துக்களாலும், பொய்யான புராணங்கள் இதிகாசங்கள் என்பன தமிழ்நாட் டில் உதிர்த்த கனற் பொரிகளாலும் கம்ப ராமாயணம் முதலிய நூல்கட்கு உரைசெய்ய வந்து தமிழை ஒழித்துக்கட்ட எண்ணிய வை. மு. கோபாலகிருட்டினமாச்சாரி போன்றோ ரின் துடுக்குச் செயல்களாலும் மனம் புழுங்கி வந்த தமிழர்களை அடியோடு தூக்கி அனலில் எறிவதுபோல், திராவிட மொழியாராய்ச்சிக் குழுவின் வாயிலாகத் தமிழையே குழிதோண்டி மறைக்க முயன்றுவரும் அண்ணாமலைப் பல் கலைக்கழகச் செல்வப் பிள்ளைகளான தெ. பொ. மீ. – சேது ஆகிய இரு சிறுபிள்ளைகளாலும் அன்னை படும் பாட்டை இன்னம் பொறுக்க மாட்டார் தமிழர் என்று எண்ணிய வேளை இது. நல்ல வேளைதானே!

தமிழ்மொழி வளர்ச்சிக்கென ஏற்படுத்தப் பட்ட இந்தக் குழுவானது, பரந்த மனப் பான்மையோடு உறுப்பினரைத் தேடுகின்றது. கல்வி, தமிழ்பற்றிய எல்லா நிறுவனங்களினின் றும் உறுப்பினர்களைக் கேட்கின்றது. தனிப் பட்ட தமிழறிஞர்களையும் அது சேர்த்துக் கொள்ள அவாவுறுகின்றது.

அதுமட்டுமன்று. தமிழ்பற்றிய எல்லாத் துறைகளிலும் அது தன் ஆராய்ச்சியைத் செலுத்தி – தன் முடிந்த முடிவை நிறுவவும் உறுதி கொள்ளுகின்றது.

எனவே, இத் தமிழ் வளர்ச்சிக்குழு, தமிழர் களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் குறைபாடுகளை நிறைவு செய்யவும், தமிழின் பயனைத் தமிழர்கள் நுகர்ந்து பயன் பெறவும் ஆன வகையில் அமைந்த ஓர் பயனுள்ள நிறுவனம் என்றே எண்ணி மகிழ் கின்றோம். அதே நேரத்தில் இது பெரும் பொறுப்புள்ள நிறுவனம் என்பதையும் குழு வுத் தலைவர்க்கு நினைவுறுத்த எண்ணுகின்றோம்.

இக் குழுவுக்கு உறுப்பினரை அனுப்ப வேண்டிய நிறுவனங்கள் தம்மிடமுள்ளவர் களில் நல்லவர்களை அனுப்புவதில் அக்கரை கொள்ளவேண்டும். தமிழின் பகைவர்களாகப் பார்த்து அனுப்பிவிடக் கூடாது.

குழுவின்தலைவரும், தாம் தேர்ந்தெடுத்தது நல்ல விதைதான் ஆயினும், விளைச்சலை அழிக் கும் மாடுகள் ஆடுகள் புகுந்துவிடாமல் தக்க படி வேலி அமைக்கவேண்டும் என்பதில் கருத் தாக இருந்தருள வேண்டும்.

நல்லவாறு அமையும் இந்தக் குழுவினர் கீழ்வரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே தம் ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டும்.

அந்த அடிப்படைக் கருத்துக்கள் வருமாறு:

1. கடல் கொண்ட குமரிநாடு முதல் இமையம் வரைக்கும் பரந்தமைந்த இந் நாவலந் தீவின் முதன்மொழி தமிழ் என்பது.

என்றுமுள தென் தமிழ்
இயம்பி இசை கொண்டான் (கம்பன்)

2. தமிழின் தலைமை இடம், குமரிநாடு சேர்ந்த தென்னாடு என்பது,

3. தமிழில் உள்ள எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்ரு. (தொல்காப்பியம்)

4. தொல்காப்பிய முதல் திருக்குறள் வரைக்குமுள்ள தமிழ்ப் பெருநூல்கட்குள்ள உரைகள் பெரும்பாலும் உரையாசிரியரின் மதம் பற்றியவை. அவைகளை முடிந்த முடிபாகக் கொள்ளலாகாது என்பது.

5. தமிழர் நூற்கொள்கை, தமிழரல்லாதவர் நூற்கொள்கை என இருபெரும் பிரிவுள்ள கொள்கைகளை வைத்தே தமிழர் நூற்களின் உரை ஆராயப்படவேண்டும் என்பது.

6. தெற்குக் கண்ணிருந்து தமிழாராய்ச்சி தொடங்கப்படுதல் வேண்டும் என்பது.

இன்னோரன்ன அடிப்படையில் தமிழாராய்ச்சிக்குழு தன் வேலையைத் தொடங்காமல் தென்னாடு, தென்றமிழ், மாட்டுக் கெட்ட எண்ணமுடையார் கூறும் பொய்க் கருத்தின் அடிப்படையில் தொடங்கப்படுதல் கூடாது.

"ஆர்வி" பட்டி 160ம் எண் இல்லத்தில் 14-11-58 வெள்ளிக்கிழமையன்று திருவாளர் இரா. மாரியப்பன் தலைமையில் திரு சீனிவாசன் B. Sc., க்கும், திருமதி அரங்கநாயகிக்கும் நடைபெற்ற திருமணத்தை முன்னிட்டு "குயில்" வளர்ச்சிக்கு ரூபாய் இரண்டு அன்பளிப்பாக வரப்பெற்ரேம்.

நன்றி.

– அமைச்சர்.

தமிழ் மொழி வளர்ச்சிக் குழு சென்னையரசு அமைத்தது.

தமிழ் மாநிலத்தில் தமிழர்மொழி வளர்ச்சிக்கான வகையில் ஆராய்ச்சிக் குழுவொன்று 15—11—58 காலை அரசினர் அலுவலகத்தில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களால் அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஆராய்ச்சிக் குழுவுக்குத் தலைவராக அமைச்சர் சி. சுப்பிரமணியம் அமைக்கப்பெற்ருர்.

இக் குழுவின் குறிக்கோள்: ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ள தமிழ் மொழியை விரிவுபடுத்தல், பாட மொழிக்கான வழிவகுத்தல், இலக்கியம், மொழி வளர்ச்சி ஆகியவைபற்றி ஆராய்ச்சி செய்தல், முதலியன.

இக் குழுவில், சட்ட மன்றத்தின், கல்விக் கருத்துரை குழுவைச் சேர்ந்த இருவரும், பல்கலைக்கழகங்களிலுள்ளார் இருவரும், பல்வேறு மொழிவளர்ச்சிக் கழகத்தவர்களும், இடம் பெறுவார்கள்.

கீழ்க்கண்ட தனிப்பட்ட நிறுவனங்களும் இக் குழுவில் உறவுபெறும். மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், சரசுவதி மகாலின் நூல் நிலையம், சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம், சாமிநாதஐயர் படிப்பகம் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்பவை அவை.

இதுவுமன்றிக் கலவித்துறை இயக்குநர் இடம் பெறுவார். பல்வேறு ஆராய்ச்சித்துறைகளைச் சேர்ந்தவர்களும் தென்னிந்திய ஆசிரியர் சங்கம், பல்கலைக் கழகங்களின் ஆசிரியர் சங்கம் ஆகியவைகளும் இடம்பெறும்.

இக் குழு சனவரித் திங்கள் 26-ம் நாள் தொடங்கி வைக்கப்பெறும்.

—அறிவிப்பாளர்

இயற்கைச் செறிவு...

தவருத ஞாயிற்றைத் தலைவனுக்கு ஒப்புக் காட்டி அவன் எப்பொழுதும் நேர்மை வழி நடப்பவன் என்பதை மனதுட் கொண்டு தலைவனது அன்பில் ஈடுபட்டு அவன் செயலோடு ஒத்து இயங்கும் தன்மை கூறிய தலைவியின் நுண்ணறிவு வியந்து புகழ்ந்து போற்றுதற்கு உரியதொன்ரும்.

தன் மென்மையும் தலைவனது வன்மையும் தோன்றத் தன்னை மலருக்கும் தலைவனை ஞாயிற்றுக்கும் ஒப்பிட்ட உவமை நிலையை ஊன்றி உணர்ந்து இன்பம் கொள்க.

இப்பாட்டியற்றிய புலவர் தலைவியினுடைய கருத்தை அவளது தோள்மேல் ஏற்றிக் கூறும் வகையில் தோள்களின் தன்மை கூறி அவளது அரும் பெரும் எழில் நலத்தையும் உரு நலத்தையும் உய்த்துணர வைக்கிருர். "நெருஞ்சி அனைய என் பெரும் பணைத் தோளே" என்பது அவர் பயன் படுத்திய அடி.

பிற்காலத்துப் புலவர்கள் ஒரு பெண்ணைத் தம் பாடலில் காட்ட வேண்டுமானல் அவளது உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் வரையிலுமுள்ள ஒவ்வோர் இன்பியல் உறுப்பையும் பத்துப் பதினைந்து பாடல்கள் மூலம் பாடிக் கீழ்த்தரக் காமச் சுவையை ஊட்டி வளர்த்திருக்கின்றனர்.

பண்டைய தமிழ்ப் புலவர்கள் அவற்றைக் குறிப்பாகப் புலப்படுத்தி, அதன்கண் பேரழகை நிறுவிக்காட்டும் திறன்பெற்றிருந்தார்கள். அவ்வாறு ஓரிரு வார்த்தைகளில் வடித்தெடுத்த பெண்மையின் எழில் நலம், உறுப்புக்கு ஒரு பாடல் மூலம் பாடிய அத்தனை பாடல்களையும் ஒருங்கு வைத்து நோக்கினல் கூட, இந்த ஓரிரு சொற்கள் புலப் படுத்திய பேரழகின் காலடிக்குக் கூட எட்டாது.

மேலும் பழம் பாடல்களில் காதல் நலம் கனிந்து, சான்ருேர் மனமென்னத் தெளிந்து உள்ளத்திற்கு அமைதி நல்கும் பிற்றை நாட் புலவர்களின் பாடலில் காமம் மேலோங்கி நின்று, எருமை இறங்கிச் சேற்றைக் கலக்கிய குட்டை போன்று தியவை மண்டி நெஞ்சில் தியவைகளைத் தோற்றுவிக்கும் தன்மைதான் பெருகி நிற்குமே தவிர பிறிதொன்றுமில்லை.

இப் பாடலை ஒரு முறைக்கு மும்முறை படியுங்கள். காதல் கனிந்து நிற்குமே யொழிய காமம் பெருகி நிற்காது. அன்பு பொங்கிப் பெருகி நிற்குமே யொழிய அறிவோடு பொருந்தாக் கீழ்த்தர எண்ணங்கள் மேலோங்கித் தோன்ரு.

எழு என்ற சொல்லை நோக்குவோம். உட்கார்ந்திருப்பவனை எழுஎன்ருல் என்ன செய்கிருன்? தனது முயற்சியைக் கொடுத்து எழுதலாகிய செயலை மேற் கொள்கிருன். எழுச்சி என்ருல் என்ன? சோம்பிக் கிடக்கும் உள்ளத்திற்குத் தெம்பூட்டி உரன் கொடுத்து எழச் செய்வதுதானே எழுச்சி. ஆகவே எழு, எழுச்சி என்ற சொற்களெல்லாம் மேலும் முன்னேறு முயற்சி செய் என்று தானே பொருள்படும்.

எழுதரு மதியம் என்று இப்பாடலில் முதற் சொல்லாக அமைத்திருப்பதை நோக்குக. திங்கள் எழுச்சி பெற்று எவ்வாறு தன் கடமையைத் தவருது ஆற்றுகிறதோ அதுபோல நாமும் எழுச்சியுடன் புத்துள்ளம் கொண்டும் வினையாற்றுதல் வேண்டும் என்பதைக் குறிக்கத்தான் எழுதரு மதியம் என்று பாட்டியற்றிய புலவர் கூறினர் எனக் கொள்க.

பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கையைக் கண்டு, இயற்கையில் படிந்து, இயற்கையில் மூழ்கி ஒன்றி நின்று வாழ்ந்திருக்கிருர்கள். பலநாள் அவற்றைக் கண்டு கண்டு நுண்ணிதின் உணர்ந்ததன் பயன் தான் பாட்டாக முகிழ்த்து தமிழ்த்தாயின் அணிகலனுக மாறியிருக்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக நாம் பார்த்துவரும் இந்தச் சிறுபாடலிலேயே திங்கள், ஞாயிறு, கடல், மலை, அருவி, மலர் ஆகிய இத்தனை இயற்கைப் பொருள்கள் பயின்று வந்தமையே போதிய சான்ருகும்.

இவ்வளவு கருத்துக்களையும் தன்னகத்தே கொண்ட இப்பாடலுக்கு ஆசிரியர் பயன்படுத்திய எழுத்துக்கள் எத்தனை என்று தெரியுமா? முப்பத் தொன்பது.

குயிலே வெல்க!

கேத்த. நடராசன், கோவை.

நாடி நலமறிந்து நற்றமிழ் நாடுயரப்
பாடி பலநலஞ் செய்திட—ஓடி
வருங்குயிலே வண்டமிழ் மக்களெலாம் வாழ
தருங்கவி தந்துநீ வெல்,

முப்பத்தொன்பது எழுத்திலே விரைந்தசைந்து எழுந்துவரும் நிலவைக் காட்டுகிருர்; பரந்துபட்ட பெருங்கடலை நம் சிறுகுடிலில் இருந்தவாறே நமக்குக் காட்டுகின்ருர்; உயர்ந்தோங்கிய மலையைக் காட்டுகின்ருர்; அதன் முடியைக் காட்டுகின்ருர், அங்குச் சுரந்துவரும் அருவியைக் காட்டுகின்ருர்; அறிவு விளக்கந்தரும் ஞாயிற்றைக் காட்டுகின்ருர்; அதன் இயக்கத்தோடு ஒத்த நெருஞ்சிப் பூவோடு நம்மையும் ஞாயிற்று மண்டிலத்தின் இயக்கத்தோடு ஒத்து இயங்க வைக்கிருர்.

செலவழித்த எழுத்துக்கள் முப்பத்தொன்பது சீர் பதினைந்து; அடிகள் நான்கு. மேலும் இப்பாடலில் வேண்டாத பொருட்செறிவற்ற சொற்கள் ஒன்றேனும் உண்டா? சொற்களை எண்ணி; நிறுத்து; அளந்து பெய்து பாட்டியற்றி இருக்கிருர் புலவர். சொற் செட்டையும் பொருட்செறிவையும் எண்ணுக.

முப்பத் தொன்பது எழுத்துக்களில் உயிர்எழுத்துக்கள் இரண்டு வல்லெழுத்துப் பதினன்கு. மெல்லெழுத்து பதினென்று. இடையெழுத்துப் பன்னிரண்டு.

உயிர் எழுத்துக்கள் இரண்டும் உலகுக்கு உயிர் போன்று விளங்கும் ஞாயிற்றையும் திங்களையும் குறித்தன என்க. வல்லெழுத்து தலைவனையும் மெல்லெழுத்து தலைவியையும் குறித்தன எனக் கொள்க. இனி இடையெழுத்துப் பன்னிரண்டும் தலைவனுக்கும் தலைவிக்கும் இடைப்பட எழுந்த இயற்கைப் பொருள்களாகிய திங்கள், ஞாயிறு, மலை; கடல்; அருவி; மலர் ஆகிய ஆறு பொருள் கட்கு, பொருளுக்கு இரண்டெழுத்தாகக் கொண்டு பன்னிரண்டு எழுத்தாகி வந்தமையை எண்ணுக.

தக்க வகை புரிவாய்!

கடலூர், வீ. சு. ஜீவா.

தெள்ளு தமிழ்ச் சிறப்பை — உயர்த்தும்
செந்தமிழ்த் தேன்குறளை
சொல்லிட நாவினி க்கும் — கருத்தைச்
சுவைக்க உளமினிக்கும்!

வெள்ளிப் பனி மலையை — தமிழன்
வென்றபெருங் கதையை
தெள்ளத் தெளிவாக — அறிந்திடில்
தீரம் மிக வளிக்கும்!

தன்னரசா ண்ட கதை — தமிழன்
தன்மை யுரைக்குங் கதை
பெண்ணரசா ண்ட கதை — தமிழன்
பெற்ற சிறப்புக் கதை.

இன்னும் பல சரிதம் -- தமிழன்
ஏற்ற முரைத் திடினும்
இன்னுமிந் நாள் தமிழன் — எதிலும்
ஏற்றம் கண்டவ னில்லை!

வெல்லம் நிகர் தமிழை — வீழ்த்த
வீணர்கள் இந்தியினை
கொல்லை வழி யாகக் -- கொணர
கொள்கை வகுப்பதுவும்

தெள்ளு தமிழ் நாட்டை -- வட
தியர்கள் ஆளுதற்கும்
குள்ளநரிச் செய லால் -- குழி
தோண்டுதலைக் கண்டும்

கல்லுச் சிலைகளைப் போல் -- அதைக்
கண்டும் குருடரைப் போல்
சொல்ல மனங் கொதிக்கும் -- நிலையில்
துரோகம் புரிகின் ருரே!

பொன்னிகர் தாயக மே—உரிமை
பொங்கிட இத்தினமே
தன்னுணர் வவத் தமிழன்—பெறவே
தக்க வகை புரிவாய்!

★

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0-15 (பதினைந்து காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு	ரூ. 100
அரைப்பக்கத்திற்கு	ரூ. 50
கால் பக்கத்திற்கு	ரூ. 30

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

ஆய்தம்

தமிழரின் ஆய்தத்தை வடவர் பறித்துக் கொள்ளப் பெரிதும் முயன்றுள்ளனர். மு. இராகவையங்கார் இதை வடசொல்லாக்கத் தலைகீழ் நின்றூர் என்பதை அவர் எழுதிவெளியிட்ட ஆராய்ச்சித் தொகுதி கண்டார் அறிந்தாராவார்.

ஆய்தல் அகம், ஆயுதல் அகம், ஆயல்அகம், ஆய்தகம் என்பன அனைத்தும் பயிலிடத்துக்கு ஆன பெயர்கள். சிறப்பாக அது படைப்பயிற்சி செய்யுமிடத்துக்கு ஆம். இந்த ஆய்தகம் என்பது ஆய்தம் என ஈறு திரிந்த ஆகுபெயராய்ப் படைக்கு ஆயிற்று.

இனி ஆய்தம் என்பது (ஃ) ஆய்தவெழுத்துக்கும் ஆம். அப்படி ஆம்போது அது உவமை ஆகுபெயர் என்க.

ஆய்தம் என்பது (படை) தானேயன்றித் தான் மற்றொன்றை – தன்னை எடுத்தாள்வோனைச் சார்ந்து பயன் படுவது.

ஆய்த எழுத்தும் வல்லெழுத்தைச் சார்ந்து பயன்படுவது. ஆய்த எழுத்து–சார்பெழுத்துக்களில் ஒன்று.

சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலஎனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தம்மியல் பியலும்

என்னும் தொல்காப்பிய நூற்பாவை நோக்குக.

எனவே, ஆய்தம் வடமொழியன்று. தூய தமிழ்ச்சொல்.

ஃ வந்த சேதி முடிந்ததே! ஃ

வந்த சேதி முடிந்ததே — இயங்கு
வண்டி ஓட்டுவாய் வலவனே விரைவாய்
(வந்த)

செந்தேன் ‘உண்டநினைவு சிறிதுநேரம் இருக்கும்
சேயிழை இன்பநினைவு எப்போதும் இருக்கும்
நொந்தது நோக்காது வழிபார்த்து நிற்கும்
நூலிடை எனைக்கூவிக் கூவி அழைக்கும்
(வந்த)

புதுவை நகருக்கு விரைந்துபோக வேண்டும்
பொறி இயக்குநெய் எத்தனைபடி வேண்டும்?
இதோஎன்று பொறியினை முடுக்கிடு தாளில்
இன்பம் என்று போய்விழுவேன் அவள்தோளில்
(வந்த)

தாவும்வழியில் புக்கத்துறை கண்டு நிறுத்துத்
தமிழன் உணவுவிடுதி காண்பதென் கருத்து–நல்
ஆவல் ஊசலாட்ட அகத்தும்புறத்து மாகி
அழுவாளின் மார்பில் எனைக்கொண்டு பொருத்து.
(வந்த)

பொறிஇயக்குநெய் – பெட்ரோல்

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கஎ.

இடம்: சோணாட்டு உறையூரில் ஒரு தெரு.

காலம்: மாலை.

உறுப்பினர்: படைத்தலைவர் பருஉத்தலையார், அவர் மகள் மணியிடை, இளங்கோச்சோழன், வீட்டினர், படையினர்.

காட்சித்தலைப்பு:

வஞ்சக் கூத்து.

நிகழ்ச்சி: இளங்கோச் சோழன் தேரேறி முன்னணியிற் செல்ல, நாற்படை பின்தொடர்ந்து செல்கின்றது. இசைக் கருவிகள் முழக்கமிடுகின்றன. தெருவிலுள்ளார் ஆடவர் பெண்டிர் படையை வாழ்த்துமுகத்தால் மலர்மாரி பொழிகின்றார்கள்.

படை, படைத்தலைவராகிய பருஉத்தலையர் வீட்டை நெருங்குகின்றது. அவர் வீட்டின் மேன்மாடியில் படைத்தலைவர் மகளாகிய மணியிடை, கண்டு வருந்துகின்றாள். அதை இளங்கோச் சோழன் காணுகின்றான். ஆயினும்அதேநேரத்தில் படைத்தலைவராகிய பருஉத்தலையரும் வீட்டினின்று வெளி வந்துவிடுகின்றார்.

இளங்கோச்சோழன்:

(தேரினின்றே - மாடியிலுள்ள அவளுக்கும்தேற்றுமொழிகூறுகின்றான் படைத்தலைவர்க்கும் உறுதிமொழி கூறுகின்றான்.)

பாட்டு

வாடா மலர்முகம் வாடுவதென்ன மறப்பதுண்டோ?
வீடேறி இன்றிரா மேன்மாடிஏறி வருவதுண்டு
கூடாத கோதை முழுவெற்றி மங்கை!குறைதவிர்க
பாடேறும்இந்தப் படையுண்டு நல்லபயனுமுண்டே!

(படையும், தேரும் போகின்றன. கண்மறையும்வரைக்கும் அவள் அவனையே பார்த்திருந்து போகின்றாள்.)

இடைக் காட்சி.

இடம்: படைத் தலைவர் பருஉத்தலையார் வீடு

காலம்: ஷை

உறுப்பினர்: படைத்தலைவர், மணியிடை, அவள் அன்னை.

காட்சித்தலைப்பு:

ஷை

நிகழ்ச்சி: பேசுகின்றார்கள்.

மனைவி: கூத்து!

படைத்தலைவர்: வஞ்சக்கூத்து! இவனுக்கு வெற்றிமங்கை வந்துவிடுவாளாம்! அதிலும் அவள். வீடேறி வருவாளாம். வீட்டின் மேல் மாடி ஏறி வருவாளாம். மேலும் இன்றிரவேயாம்.

மணியிடை: பகை இருந்தால்தானே வெற்றி கிடைக்கும். படைகூட்டிக்கொண்டு எங்கேதான் போகின்றாரோ தெரியவில்லை.

மனைவி: பாண்டியனார் படை வந்துகொண்டிருக்கிறதாமே!

படைத்தலைவர்: யார் சொன்னார்?

மனைவி: இளங்கோச் சோழன் சொல்லவில்லையா?

படைத்தலைவர்: அதுமட்டுமல்ல. பாண்டியன் அனுப்பிய ஒருமறவனும் போர் தொடங்கப் போவதாகக் கூறிப்போனான். அத்தனையும் அடியோடு பொய்!

மணியிடை: ஏதோ-படை தேவைஎன்றார் இளவரசர். கொடுத்தார் அரசர். கேட்டவர்க்குக் கேட்டபடி கொடுப்பதுதானே அவர் வேலை.

படைத்தலைவர்: ஆம் இப்போது மன்னவர் கேட்டவர்க்குக் கேட்டபடி கொடுக்கவில்லை. கெட்டவர்க்குக் கெட்டபடி கொடுத்தார் என்று எண்ணுகின்றேன்.

அரசி: நான் நினைப்பது வேறு.

படைத்தலைவர்: கூறு!

அரசி: இளவரசுக்குப் பகைவர் யாரோ இருக்கின்றார்கள். அந்தப்பகைவர் பாண்டிய மன்னர் அல்லர். படை கூட்டிக்கொண்டு போகின்றார் இளவரசர்.

மணியிடை: திரும்பினால்தான் — பெற்றவர்க்குப் பிள்ளை!

படைத்தலைவர்: நன்று கூறினையம்மா!

மணியிடை: இன்றிரவு அரசினர் பணி உண்டோ உங்களுக்கு?

படைத்தலைவர்: மேலைத்தெருவைச் சுற்றிப் பார்த்து வரவேண்டும்.

மணியிடை: என்ன பார்ப்பது? திருடர் உண்டா? எல்லாரும் நல்லவர் இந்த நாட்டில். எல்லாரும் செல்வர் இந்நாட்டில்!

படைத்தலைவர்: ஆயினும் பிசிராந்தையார் சொன்னபடி எல்லாரும் வல்லவராயில்லையே! வலியார் மெலியாரை வாட்டவும் கூடுமன்றோ!

மணியிடை: உணவு படைத்தாய்விட்டது அப்பா!

போதல்.

அன்று நள்ளிரவில்.

மேல் மாடியினின்று ஒரு நூலேணி இறங்குகின்றது. அதில் இளங்கோச் சோழன் ஏறுகின்றான்.

பஞ்சணையில் படுத்தபடி இளங்கோச் சோழனும், மணியிடையும் பேசுகின்றார்கள்.

இளங்கோ: ஊரில் இருக்கமாட்டேன் என்று உறுதியாக நம்பினார்கள் உன் பெற்றோர்கள்.

மணியிடை: *(கையால் முகத்தை மறைத்துக் கொள்ளுகின்றாள்.)*

ஆமாம்!

இளங்கோ: மேலைத் தெருவில் சுற்றுகின்றார் உன்தந்தை. மூலையில் நின்றிருந்ததைப் பார்த்தேன். நம் முதல் நாள் இன்பமும் முடிந்தது இங்கே!

மணியிடை: *(கையை எடுத்துக் கண்ணீர் விடுத்து)*

இன்பத்தை நான் அடையவில்லை. துன்பத்தையே அடைகின்றேன்.

இளங்கோ: வியப்பு! நன்றாகச் சொல்லிக் காட்டு!

மணியிடை: வாராதிருந்தாலும் வருத்தம் உண்டாகாது.

இளங்கோ: வந்ததால்?

மணியிடை: பிரியத்தானே நேரும்? — என் மனம் படும்பாடு எனக்கல்லவா தெரியும்!

இளங்கோ: பிரியாதிருக்கப் பெரியதோர் திட்டம் இட்டிருக்கிறேன்.

மணியிடை: படை எங்கே?

இளங்கோ: காத்துக் கொண்டிருக்கிறது. அண்டியூரின் ஒருபுறம்.

மணியிடை: பகைவர் எங்கே?

இளங்கோ: படுத்திருக்கின்றார் மாளிகையின் மகளிர் இல்லத்தில்.

மணியிடை: விளங்கவில்லை.

இளங்கோ: மனத்தில் வைத்திரு! அரசர்-என் தந்தையார்தாம் என் பகைவர். நம் பகைவர். விரைவில் தெரியும் செய்தி! சுருக்கமாகச் சொல்லுகிறேன். நான்தான் இந்நாட்டுப் பேரரசன்! நீதான் பேரரசி! பிரியாதிருப்போம்! மாளிகையின் மகளிரில்லத்தில் — மணிக்கட்டிலில் நாம் பிரியாதிருப்போம பெண்ணே, எனக்கு விடை கொடு! நாழிகையாகின்றது!

இயற்கைச் செறிவு

கயல்விழி

பரந்துபட்ட பெரும் பரப்பாகிய நீலக் கடலலை யின் தோற்றம் வேண்டும். நிலா எனப்பெயர் கொண்ட பெண்ணுள் தனக்கு ஒளியூட்டி ஒப்பனை செய்து உலகிலுள்ளோர் உள்ளத்தைச் சூறையாடி உலாவர, அதற்குக்கடலன்னை வழியனுப்பும் காட்சி வேண்டும். வேறென்ன வேண்டும்?

செக்கர் நெடுவானில் திங்கள் நிலாத் துளும்பி எக்கர் இடுமணலில் கால் பரப்பும் காட்சி வேண்டும். போதுமா?

குவலயத்துக் குரங்குகளும் கூடி முயன்று ஏற முடியாத மலையின் கூர் உச்சிக் காட்சி வேண்டும். அமைத்து விட்டாயா?

அல்ல. அந்த மலை முகட்டில் மான் பருகச் சுரந்து பெருகித் ததும்பி வழியும் வெள்ளருவியின் வீழ்வுக் காட்சி வேண்டும்.

வேறென்ன வேண்டுமெனில் இன்னும் வேண் டும் வேண்டும் என்பேன். என்ன வேண்டும்?

சுடர் கதிர்ச் செல்வனின் சீர் இயக்கம் வேண்டும். பூ வேண்டும். அமிழ்தில் குழைத்து வடித்தெடுத்தபொற்பாவை ஒருத்தியின் புன்னகை வேண்டும்.

வேறென்ன வேண்டுமெனில் இவற்றைக் காணுதல் வேண்டும்.

காணத்தான் வேண்டுமா? அவ்வளவு வேட்கையா?

ஆமாம். காணத்தான் வேண்டும். வேட்கை யெனில் வெறும் வேட்கையல்ல. விண்ணை முட்டும் வேட்கை. வேட்கையின் கொடுமுடியில் நிற்கும் வேட்கை.

வேட்கையைத் தீர்க்க வேறென்ன வேண்டும்? மேலே கூறியவற்றைப் பருகுதல் வேண்டும்.

பார்ப்பதுடன் நின்றுகொள். பருகாதே தம்பி.

அல்ல. அல்ல. பருகித்தான் ஆகவேண்டும்.

அவ்வாறெனில் இதோ காட்டுகிறேன். பருகு. ஆனால் நிதானத்துடன் பொறுத்துப் பருகு.

"எழுதரு மதியங் கடற்கண்டா அங்கு
கொழுங்குவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையன் தோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே"

— குறுந்தொகை 135

பச்சென்ற திருநிறமும், சேயிதழும், வெண் ணகையும், நச்சம்பும், தேன் தங்கித் தித்தித்து அமுதூற நவிற்றுகின்ற புது மழலைச் சொல்லும் கொண்டு, உரு நலஞ் சிறந்து, எழில் நலங்கனிந்து, அழகே அமைவாய்ப்பெற்று நின்ற அந்த ஆரணங்கு காதலனின் பிரிவால் வாட்டமுற்று, அப்பொழுது பறித்தெடுத்த செங்கீரைத் தண்டு ஏறு வெயிலில் கிடந்தது போன்று தளர்ந்து துவண்டு கிடந்தாள்.

சிற்றில் இழைத்து சிறுசோறு ஆக்கிச் சேர்ந்து விளையாடிய நாள் தொட்டுப் பழகிய இன்னுயிர்த்

மணியிடை: வாழ்வது எப்படி? கடல்நீர்க ளனைத்தும் உன்னைக் காத்திருந்தேன். துளி நீர் உண்டால் தொலையுமோ நீர் வேட்கை? ஒன்று செய்யுங்கள்! உடனழைத்துப் போய் விடுங்கள். வந்தது வரட்டும். என் உடலில் உயிர் தங்கட்டும்.

இளங்கோ: நினைத்ததொன்று முடிவ தொன்று?

மணியிடை: வாழப் பிறந்தோமா சாகப் பிறந்தோமா! பிரிந்து வாழமுடியும் ஆடவரால்! மகளிரால் அது முடியுமா? நூலேணியை மாடியிற் கட்டித் தொங்கவிடுகின்றேன். இருவரும் இறங்கிப் போய்விடுவோமே.

இளங்கோ: வந்தது வரட்டும் படை இருக்கிறது என்கையில்.

(இருவரும் நூலேணியில்-முன்னே மணியிடையும் பின்னே இளங்கோச் சோழனுமாக இறங்குகின்றார்கள்.

தோழி ஒருத்தி. இவளது மனக்கவலையை நுண்ணிதின் உணர்ந்து ''உனது காதலனின் பிரிவு குறித்து இவ்வாறு வருந்துதல் அழகல்ல'' என்று கூறி நின்றாள்.

''எழுகின்ற நிலவு கடலிடத்தே தோன்றினாற் போன்று மலையில் அருவி தோன்றும் மலை நாட்டையுடைய என் காதலன் ஞாயிற்று மண்டிலத்தை ஒப்பாவான். நெருஞ்சி மலர் ஞாயிற்றின் இயக்கத்தோடு ஒத்துத் திரும்புதல் போல, நானும் தலைவனது அன்பில் ஈடுபட்டு அவன் செயலோடு ஒத்து இயங்குவேன். ஆகவே நான் காதலனின் பிரிவு குறித்து வருந்தவில்லை'' என்பதைத்தான் தலைவி வாயிலாக புலவர் வெளியிட்டிருக்கும் மேற்கண்ட பாடலின் பொருள்.

இச் செய்யுளின்கண் அமைந்திருக்கும் இயற்கைப் பொருட்களின் செறிவும், காதலி தன் இன்னுயிர்க் காதலன் மீது கொண்டுள்ள அன்பின் பெருக்கமும் உள்ளத்து உணர்வுகளைக் கிளரிவிட்டு நலம்பல காட்டுகின்றது.

''எழுந்துவரும் நிலவைக் கடலிடத்துக் கண்டாற் போன்று மலையிடத்து அருவி தோன்றும் நாட்டையுடைய காதலன்'' என்பதற்கு

''எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு
ஒழுகு வெள்ளருவி ஓங்குமலை நாடன்''

என்ற அடிகள் பாடலில் பயிலப்படுகின்றன.

கடல் மலைக்கும், திங்கள் அருவிக்கும் உவமையாக்கப்பட்டிருக்கிறது. மலையின் நிறமும் கடலின் நிறமும் நீலம் கலந்த கருமை. நிலவின் நிறமும் அருவியின் நிறமும் வெண்மை. ஆகவே நிற ஒப்புமை.

நிலவை 'எழுதரு மதியம்' என்று புலவர் அடை கொடுத்துச் சுட்டியிருக்கிறாரே. அது ஏன்? என்று காணுதல் வேண்டும்.

கருமை நிறமாகிய மலையில் வெண்மை நிறமாகிய அருவி சுரப்பதை புலவர் ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கிக் காட்ட விரும்பி இருக்கிறார். கடலும் நிலவும் அவர் கண்களில் காட்சி அளித்திருக்கின்றன. கடல் கருமை. திங்கள் வெண்மை. இவை இரண்டையும் பொருந்திய நிலையில் காட்டினால்தான் மலையிலிருந்து தோன்றும் அருவிக்கு ஒப்புக் கூறுதல் முடியும் எனக் கண்டிருக்கிறார்.

திங்கள் எழாமல் இன்னும் கடலுக்குள் இருந்தால் திங்களையும் கடலையும் ஒரு சேரக் காண முடியாது. எழுந்து மேலே சென்று விட்டாலும் கடலையும் நிலவையும் ஒரு சேரக் காண முடியாது. அவ்வாறாயின் திங்களையும் கடலையும் எப்பொழுது ஒரு சேரக் காண முடியும்?

அகன்று பரந்து பட்ட நீலக் கடலில் அப்பொழுதுதான் நிலவு அழகுற்று எழில் பெற்றுச் சிறிது சிறிதாகத் தோன்றி முழுதும் வெளிவந்து விடாத நிலையில் கடலையும் திங்களையும் ஒரு சேரக் காணுதல் முடியும். இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்பிய புலவர் கடலுக்குள்ளிருந்து எழாத மதியம் என்றோ எழுந்து சென்ற மதியம் என்றோ, கூறாமல் ''எழுதரு மதியம்'' என்றார்.

ஓவியத் துறையில் நன்கு தேர்ச்சி பெற்ற சிறந்த ஓவியர் ஒருவர் கடலிலிருந்து எழுகின்ற நிலவை ஓவியமாக்கி நம் கண்ணெதிரில் கொணர்ந்து காட்டியது போல் தோன்றவில்லையா?

இயற்கைப் பொருட்களைக் காட்டி நமது கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தூட்டி தமது அழகால் எழிலால் நம்முடன் அவைகளைப் பேச வைத்திருக்கும் பழந் தமிழ்ப் புலவரின் இயற்கையுணர்வையும் பாட்டியற்றிய திறனையும் எம் மொழியால் புகழ்ந்து கூற வல்லோம்?

தனது காதலனை ஞாயிற்று மண்டிலத்திற்கும், தன்னை அந்த ஞாயிற்றினது இயக்கத்தோடு ஒத்துத் திரும்பும் நெருஞ்சிப் பூவினுக்கும் ஒப்பிட்டிருக்கிறாரே. 'அது ஏன்? எனக் காண்போம்.

ஞாயிற்று மண்டிலம் முறையாக, வரையறைக்குட்பட்ட ஒரு நியதியில் சுழன்று மன்னுயிர்க்கு ஆக்கம் செய்வது போல தலைவனும் தனது கடமையில் தவறாது தானும் வாழ்ந்து பிறருக்கும் உதவி செய்து இன்பூட்டுவான் என்பதும், ஞயிறு போலத் தனது காதலன் ஒப்பாரும் மிக்காரும் இன்றி, குறைவிலா நிறைவாய், கோதிலா அமுதாய், இலங்குகிறவன் என்பது பெறப்படும்.

தலைவி தன்னை நெறிஞ்சி மலருக்கு ஒப்பிட்டுத் தலைவனது இயக்கத்துக்கு தக்கபடியெல்லாம் திரும்பும் இயல்புடையவள் என்று கூறி இருக்கிறதே. அவ்வாறாயின் தலைவன் நேர்மையற்ற வழிகளில் சென்றாலும், அதற்கும் இணங்கி நடப்பது சரியா? என்ற வினா எழலாம்.

தலைவன் நெறியல்லா நெறிக்கண் செல்ல மாட்டான் என்னும் பொருள்பட, நெறி முறை

தொடர் 5-ம்பக்கம் பார்க்க.

தொழுது பிழைகேட்கும் தூயவன்.

—: பா லு. :—

மானினம் கலங்க, மயிலினம் அகவ, மலையின் மாசுகழிய; அல்லி, ஆம்பல், மல்லிகை, முல்லை, குருக்கத்தி, பாதிரி, தாமரை, துளவு, சண்பகம், செங்கழுநீர், நாகம், நறவம் ஆகிய மலர்களாலான ஆடை உடுத்து, சயமலைக் கண்ணின்று இறைந்து கொண்டே இழிந்த அருவிப் பெண்ணாள், வையையினை நோக்கி விரைந்து வருகிறாள் என்ற செய்தி வெள்ளம்போல் கூடல் நகரெங்கும் பரவவே ஆடவரும் பெண்டிரும் கூட்டங் கூட்டமாக வையையின் கரைக்குப் பறந்தனர்.

இதனைக் கண்ணுற்ற வெயில் நிகர்த்த முகமுடைய அவன், சிப்பம் பிரித்தெடுத்த சிங்காரப் பதுமையொத்த அவளை அருவிநீராட அழைத்தான். அவளும் அவனின் கையோடு கைகோர்த்து, மெய்யோடு மெய்சேர்த்து வையையில் குளிக்க விரும்பினாள். எனினும், அங்கேநீராடவரும்எவளின் அழகிலாவது அவன் தன்னுள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டால், அல்லது அவன் அழகில் மயங்கி எவளாவது அவனுக்கு வலை வீசிவிட்டால் என்னசெய்வது என்று எண்ணித் தயங்கினாள். ஆயினும் அவன் அழைப்பைத் தட்டிக் கழிக்க மனமில்லாதவளாய் "நாம் விழிப்புடனிருந்தால்?" என்ற வினாவை எழுப்பித் தன்னுள்ளத்தை அமைதி படுத்திக்கொண்டு புறப்பட்டாள்.

வையையை அடைந்ததும் அவள் அவனோடு இறங்கிக் குளிக்கத் தொடங்கினாள்; அதுபோது அயலே இருந்த அணங்கொருத்தி, தன் கொழுநனை அமிழ்தொத்த நோக்கோடு பார்ப்பதைக் கண்டாள். அது பொறாது, "அவள் நோக்குமளவு பிழையுடையான் போலும் இவன்" என்று எண்ணி அவன்மீது சினம் கொண்டு, தன்மலர் மாலையைக் கோலாகக் கொண்டு புடைத்தும், முத்து வடத்தை வாங்கிக் கைகளை இறுகஇறுகக் கட்டியும் ஒறுத்தாள். எதிர்பாராத திடீர்த் தாக்கு தலுக்கு ஆளான அன்னோன் தன் பிழையொன்றும் காணாகி அவளைத்தொழுது, "என் பிழையாது?" என்று கலங்கினான். அவளோ "கற்பெனப்படுவது பிறர் நெஞ்சு புகாமை! ஆடவர்க்கும் அஃதுண்டு" என்று கூறாது கூறி ஊடல் மிக்கவளாய் வையையினின்று வெளியேறினாள்.

"அமிர்தன நோக்கத்து அணங்கு ஒருத்தி பார்ப்பக்,
கமழ்கோதை கோலாப் புடைத்துத், தன்மார்பில்
இழையினைக் கையாத்து, இறுகிறுக்கி வாங்கிப்
பிழையினை என்னப், பிழையொன்றுங் காணான்,
தொழுது பிழைகேட்கும் தூயவன்..."

பரிபாடல் – 12. வரிகள்: 57–61.

அரையாண்டு சந்தாத் தொகை கட்டிய உறுப்பினர்களுக்கு!

இந்தஇதழுடன் (இசை இருபத்தாறுடன்) உங்கள் சந்தா முடிவடைவதால் பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

—அமைச்சர்.

பெரியார்தான்.

சேலம், எஸ். முனிசாமி

நாகாக்க என்று நமக்குரைத்த வள்ளுவரின்
பாகாக்க பாடுபட்டோர் பார்மீதில்—வாகார்ந்த
ஈரோட்டு ஏந்தல் இணையில்லா எம்தலைவர்
பாரட்டும் மாபெரியார் தான்.

புத்தர் நெறி தன்னைப் போற்றிப் புவிமீதில்
நித்தம் பரவிடச் செய்திடுவோர்—எத்தராம்
ஆரியர் கூற்றை அவையினில் செப்பிடும்
சீரியர் மாபெரியார் தான்.

உயிர்ச்சத்து

—: சித்தன் :—

உடல்நோய்க்கு மருத்துவரின் உதவி வேண்டி
ஓடிடுவோம்; அன்னவரோ வைட்ட மின்கள்
இடவேண்டு மும் உடற்கே; இல்லையேல்நீர்
எமலோகத் திடந்தேட நேரும்'' என்பார்!
அடராமா! என்றுடனே அவர்கள் சொல்லும்
அருமருந்தாம் வைட்டமினுக் கடிய ராவோம்!
விடமாட்டா ருயிரின்மே லாசை முற்றும்
விட்டுவிட்ட துறவிகளும்! நாமென் செய்வோம்?

வாங்குகின்ற பொருள்களிலே ''வைட்ட மின்கள்
வகையாகச் சேர்த்தோ''மென் றெழுதி யுள்ளார்!
பாங்காகத் தூணில்,இத் துரும்பில் உள்ளான்
பரமனெனச் சொன்னவனின் றிருந்தால், மாறி
நீங்காமல் அணுக்க டொறும் வைட்டமின்தான்
நிறைந்த தெனச் சொல்லிடுவான்; ஐயமில்லை!
ஆங்காத லுங்கட்கே வைட்ட மின்னின்
அரியகதை அறிதற்கே! அறிதல் நன்றாம்!

உயிர்ச்சத்தே - வைட்டமினாம்! ''வைட்டா'' என்றால்
உயிர்;இதுவோர் இலத்தீன்சொல்; மக்கள் தம்மின்
உயிர்த்துணையா யிருப்ப தாலே மேலோர்
உயிர்ச்சத்தென் றுரைத்தார்கள்; நோய்கள் எல்லாம்
உயிர்ச்சத்துக் குறைவாலே தோன்றும் என்ற
உண்மையினை இருபானைந் தாண்டின் முன்னர்
உயிர்நூலில் வல்லார்கள் உரைத்தார்! இன்றோ
உலகெல்லாம் அதன்பேரை ஓதக் கேட்டோம்!

உடல்வளர வலிமையுற, எலும்பனைத்தும்
உறுதிபெற உயிர்ச்சத்துத் தேவை; நாட்டில்
நடமாடும் என்புருக்கி, சொறி, சிறங்கு
நரம்புச்சோர் வொடு,கண்ணின் பார்வை தேய்தல்
≠விடமின்னின் குறைவாலே! இவற்றை மேலோர்
≠வெவ்வேறாங் கிலஎழுத்தால் விளங்க வைத்தார்!
முடமான என்னாட்டீர்! மலைக்க வேண்டாம்!
முயற்சியினால் உடல் பொன்னாம்; மருந்து
வேண்டாம்!

(தொடரும்)

≠விடமின் = வைட்டமின் (உயிர்ச்சத்து)
≠வெவ்வேறாங்கில எழுத்து = ஏ, பி, சி, டி முதலியன.

மூன்று கொக்குகள்

வித்துவான், வை. மாணிக்கசாமி, புதுவை.

கொக்கு மூன்று குளக்கரையில்
குந்தி நீண்ட கழுத்ததனால்
எக்கி நீரில் பார்த்தனவே
எப்போ மீன்கள் வருமென்றே.

எந்த மீனாய் இருந்தாலும்
எட்டிப் பிடித்துத் தின்றவுடன்
அந்த விடத்தை விட்டகல
அவைதாம் எண்ணி இருந்தனவே.

குறவை மீனை முதல்கொக்கும்
குத்தித் தின்று பசிதீர்ந்தும்
சிறகை உடைய வரால்மீனில்
சிந்தை போக்கி மயங்கிற்றே.

இரண்டாம் கொக்கு வரால்ஒன்றை
இரையாய் ஆக்கிக் கொண்டவுடன்
திரண்ட நீரில் கெண்டையுமா
தின்னக் கிடைக்கா தென்றேங்கும்.

மூன்றாம் கொக்கும், கெண்டையினை
முறையாய்ப் பிடித்தும் வரால்எல்லாம்
தோன்றா தொழிந்து போச்சென்று
தொல்லைப் பட்டுச் சென்றதுவே.

ஒவ்வொரு கொக்கும் பசிதீர
உண்ட தெனினும் கிடைக்காத
வெவ்வே றான பெயர்கொண்ட
மீனை எண்ணி வாடினவே.

ஊரில் உள்ள பிள்ளையிடம்
உள்ள பொருளுக் கேங்காதீர்
பாரில் நீங்கள் பெற்றுள்ள
பண்டம் மேலாய் மதிப்பீரே.

சிறுகதை.

கொடிய கூற்றம்

வித்துவான், பா. முத்து, புதுவை.

காய்ச்சலோ கடுமை; இல்லாள்
கஞ்சியோ சோருே இன்றித்
தேய்ந்தனள் ஆறு நாளாய்;
திக்கற்ருள்; இல்லின் மீது
வேய்ந்துள்ள கூரை பொத்தல்
வெம்பனிக் கொடிய ஆட்சி;
பாயிடைப் பசியால் பிள்ளை
பாலுண்ண அவளைத் தாவும்;

இல்லாளின் நிலைமை கண்டே
ஏங்குவான் வீரன்; இந்தப்
பொல்லாத உலகத் தன்னில்
போக்கிடம் ஏழைக் கேது;
செல்லாத காசு நானே!
செய்வதென்? என்று தன்னுள்
இல்லாமை எண்ணி எண்ணி
இடிவிழு மரமாய் நின்ருன்;

நடந்தனன் அடுத்தி ருக்கும்
நகர்மருத் துவரைக் காண;
கடந்தனன் சிறிது தூரம்
கண்ணெனும் வயவி லெல்லாம்
கடும்பசி இருள்வி தைக்கக்
காதெலாம் அடைக்க வந்தே
அடைந்தனன்; கதவைத் தட்ட
மருத்துவர் அருக ழைத்தார்!

தன்னிலை வீரன் சொன்னுன்;
தகுமுறை செலவு கட்டல்
உன்னிலைக்(கு) இயலு மாஞல்
உடன்செல்வோம் என்ருர்; ஏதோ
என்னிலைக் குரிய சொல்வீர்
ஏழையான் எனவும்; அன்னூர்
பன்முறை பேசேல் ரூபாய்
பத்தாகும் எனந வின்ருர்!

சற்றிரும் ஐயா. என்று
சாற்றியே தாம்உ ழைக்கும்
முற்றத்திற் கேகி ஆங்கு
முதலாளி தன்னைக் கண்டான்;
முற்றிய காய்ச்சல் நோயில்
மூழ்கினுள் மனைவி; ரூபாய்
இற்றைக்குப் பத்துத் தேவை;
எனக்கூறி இறைஞ்சி நின்ருன்;

"பணமில்லை போடா!" என்றே
பாய்ந்தனர் வேங்கை போல;
குணமிலை மனைவிக் கென்றே
கூறுவாய் நாளும்; "போபோ
கணமும்என் எதிர்நில் லாதே
கண்டிப்பாய்ச் சொன்னேன்" என்ருர்
பணம்பெற்ருேர் எளியோர் வாழ்வைப்
பாழ்செயும் கொடிய கூற்றம்.

வீடுவிட் டிறங்கி வந்தே
விரைந்தனன் இல்லம்; ஆங்கே
ஓடிய வெறிநாய் வந்தே
ஒருகடி கடிக்க அந்தோ
கேடின்னும் என்ன வேண்டும்
எனக்கூறி உள்நு ழைந்தான்;
தேடரும் இல்லாள் ஆவி
இல்லாளாய்த் திகழக் கண்டான்.

மாணிக்கவேல் சகோர் நினைவு விழா

நீண்டநாள் சுயமரியாதை வீரர் திரு. மாணிக்கவேல் சகோர் அவர்களின் முதலாண்டு நினைவு விழா கடந்த 16-11-58 ஞாயிறு மாலை 5-மணியளவில் உப்பளம் சவுரியார் பேட்டையில்அன்னாரின் மனைவியர் திருமதி சாரதா சகோர் முன்னிலையில்,புரட்சிக்கவிஞர் திரு பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது போது புதுவை தி. க. துணைச் செயலாளர் தோழர் வலங்கை. கலைமணி. குடியாத்தம் தோழர் கோவிந்தராசன் ஆகியோர் சொற்பெருக் காற்றினர்.

மறைந்த தோழர் சகோர் முதலாண்டு நினைவு விழாவையொட்டி குயில் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது.

மாங்காட்டு மறையவன் மாண்புடையனா?

வித்துவான், நா. குருசாமி.

சிலப்பதிகாரத்துள் வருகின்ற மாங்காட்டு மறையவன் மாண்புடையவன் என்றும் கவுந்தியடிகள் தன் துறவு நெறிக்கேற்ப அவனிடம் நடந்து கொள்ளவில்லையென்றும், ஆதலின் கவுந்தியடிகள் குறைபாடுடையோர் என்ற பொருள்படவும், மயிலந் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. புலவர் சிவலிங்கனார் அவர்கள் "செந்தமிழ்ச் செல்வி"யில் (மார்கழி) எழுதியுள்ள கட்டுரை தம்முணர்வுடையார் மறுக்குந் தன்மையதாகும்.

கவுந்தியடிகள் சிறந்த சமணத்துறவி, குணமென்னுங் குன்றேறிநின்ற கோதிலாச் செம்மல், உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை என்ற குறள் நெறிக்கு மாறிலாத் தன்மையர் அடிகள் பிறசமய உண்மைகளை வெறுத்தொதுக்குங் குறுநெறி கொண்டோரல்லர். தவநெறிபற்றியோர் சினத்தலுங் கடிதலும் எங்கில்லையில்? தீநெறி பற்றியோர் திருந்த வேண்டும் என்பதற்காகவேயாம். சொற்களின் நுண்மைக் கருத்தை அளந்தறிந்து சிலம்பைச்செய்த இளங்கோவடிகள், "குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"— எனக் கடலைக் கொடுங் கடலெனக் கூறநேர்ந்ததன் நோக்கம் யாதோ அந்நோக்கே — அவ்வுணர்வே கவுந்தியடிகள் பாலும் நிறைந்திருந்தது.

உறையூரிடையில் தூர்த்தரிருவரின் பொறுக்க முடியாத்திரையுகண்டு சினந்தெழுந்த கவுந்தியடிகளால் சிறுசொற்சொல்லிய அச் சிறுமதியாளர் சாபமுற்றனர். கோவலன் அந் நிகழ்ச்சியின்போது வாளா இருந்தானல்லன்; நெறியினீங்கியோர் நீரல கூறின் – அறியாமையென்றறிதல் வேண்டும்–எனச் சினங்கொண்ட செம்மலாரைத் தெருட்டித் தன் கருணையுளத்தைக் காட்டினான். கவுந்தியும் கோவலன் கூற்றை மறுத்தாரில்லை ஏற்றருளிச் சாபவீடு தந்தருளினார். இந் நிகழ்ச்சியை வைத்து நோக்கின் கோவலன் எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள் – மெய்ப்பொருள் காணுந்திறன் இயல்பாகவே அவனிடம் மல்கி இருந்தது எனலாம்.

மறையவன் வைணவ நெறியின்கண்; கவுந்தியடிகளால் கண்டிக்கப்பட்டது வைணவ நெறியையல்ல; அவனது பேதைத் தன்மையையே சமண நெறிக்கருத்தை இளங்கோ கவுந்தியடிகளைக் கருவியாகக்கொண்டு விளக்குகிறார். பல்சமய உண்மைகளைமட்டும் விளக்கும் இளங்கோ சில மூட எண்ணங்களை இலைமறை காயெனச் சாடிச் செல்லும் திறனைச் சில இடங்களில் கண்டு தெரியலாம். அச் சிலஇடங்களில் இஃதும் ஒன்றாம்.

மறையவன் மதுரைக்கு வழிமுறைகூறிக் கோவலனுக்கு விளக்கியதைக் கைக்கெட்டிய பொருளாகவும் அப்பொருளைக்கோவலன் உண்ணவும் உறையவும்விடாது கவுந்தி தட்டிப்பறித்து எறிந்துவிட்டதாகவும் புலவர் சிவலிங்கனார் கூசாது எழுதிச் செல்கிறார்.

மறையோனுரை கைக்கெட்டிய பொருளல்ல; வெறும் புனைந்துரை. மறையோன் கூறும்பொருள் ஆரியப்புனைந்துரை வழக்கைச் சார்ந்தது. இருவேறு வழக்கையும் நன்குணராத சிவலிங்கனார் மறையோன் போன்று இல்லாத ஒரு பொருளை இருப்பதாக எண்ணி அவர் இடர்ப்படுவதோடு நம்மையும் இடர்ப்பட வைக்கிறார். பொய்யும் புனைவுமே வாழ்வாக்கொண்ட மாங்காட்டுப் பார்ப்பான் தமிழர்க்கேலாத கருத்துக்களை வகையான சூழலும் வாய்ப்பான காலமுங் கிடைத்தவுடன் தம் சமய நெறியின்பால் சார்த்தி வைணவ நெறியையே மாசுபடுத்துகின்றான். நுண்ணுணர்வற்றுத் தான் மயங்கியதோடு மட்டுமின்றிப் பிறரையும் மயங்கவைக்கின்றான் மறையவன். மறையவன் சமய நுண்மை ஓராத கட்டுக்கதைகளை நம்பும் கல்லா மாந்தனாயிருத்தல் வேண்டும். ஆராயாத அனுபவமில்லாத இம்மறையவனின் கூற்று உண்மைப் பொருளாவது எங்ஙனம்? இக்காலத்து வழக்கில் கூறப்புகின் மறையோன் முழுக் குருட்டு நம்பிக்கை உடையோனாவன்.

முயற்கோடு யாமை மயிர், என்னும் உலகில் இல்லாப் பொருள்; அதுபோன்றதே மறையவன் கூறும் மூன்று பொய்கையிலும் மூழ்கிப் பயனடைதலும். தெளிவில்லா இவ்வுரைகளைக் கவுந்தியடிகள் மறுத்துரைக்கும் தன்மை பாராட்டற் குறியது. இல்லாத ஒரு பொருளின் பயனை மறையவன் இருப்பதாக எண்ணினானெனின், கானலை நீரென எண்ணும் கல்லாரின் இழிசெயல் என விடுக்க.

புண்ணிய சரவணம்படிந்தால் ஐந்திர வியா–கரணம் கல்லாமலே உணரலாம்; இது மறையோன் கூறும் முதலுரை. முழுகிக் காண்பதைவிட பரமா–கமத்தைக் கற்று உண்மை உணர்வது மேல்; இஃது கவுந்தியின் முதல் மறுப்பு.

(தொடரும்)

குயில்

Regd. No. M. 7030.

புறப்படட்டும் புலிகள்!

தமிழ் நாட்டுவிடுதலை, தமிழ்ப்புலவர் விடுதலை !
நமக்கென்ன என்றிருப் பாரோ ! — புலவர்
நமக்கென்ன என்றிருப் பாரோ ! (தமிழ்)

தமிழைப் பேச உரிமையும் இல்லை
தாயை வாழ்த்தினும் வந்திடும் தொல்லை (தமிழ்)

தமிழ்மொழி எல்லாம் வடமொழி என்று
சாற்றுவார் பார்ப்பனர் பொய்யிலே நின்று
தமிழ்மொழி எல்லாம் தமிழ்மொழி என்று
சாற்றுவர் தமிழர்கள் மெய்யிலே நின்று

தமிழ்ப்பகைப் பார்ப்பனர் அடைவது நன்மை
தமிழ்ப்புல வோர்கள் அடைவது திமை (தமிழ்)

நற்றமிழ் என்பது தில்லிக் காகாது
நம்அமைச் சர்க்கும் காதுகே ளாது
புற்றிலே மோதினால் பாம்புசா காது
புறப்ப டட்டும் புலிகள்இப் போது (தமிழ்)

தமிழ்விடு தலைப்போரைத் தட்டிக்க ழிப்பதா ?
தட்டியே மனைவியின் முகத்தில்வி ழிப்பதா ?
தமக்குள பெருமையைத் தாமே அழிப்பதா ?
தமைஈன்ற தாயின் குடரைக்கி ழிப்பதா ? (தமிழ்)

ஆட்டிப் படைப்பவர்க் கஞ்சுதல் வேண்டாம்
அமைச்சர் என்பார்க்கும் அஞ்சுதல் வேண்டாம்
காட்டிக் கொடுப்பார்க்கும் அஞ்சுதல் வேண்டாம்
கருத்திலாக் கட்சிகட் கஞ்சுதல் வேண்டாம்! (தமிழ்)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.